
# பெரியார் ஏற்றிய பகுத்தறிவுச் சுடர், தலைமுறைகள் கடந்து ஒளிரட்டும் !

## 148- ஆவது பிறந்தநாளையொட்டி கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் புகழாரம்!



சென்னை, செப்.19-

தந்தை பெரியார் அவர்களின் 148- ஆவது பிறந்தநாளையொட்டி கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் “பெரியார் ஏற்றிய பகுத்தறிவுச் சுடர், தலைமுறைகள் கடந்து ஒளிரட்டும்” என்று புகழாரம் சூட்டி பதிவிட்டுள்ளார்.

இதுகுறித்து கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டிருப்பதாவது:-

**தமிழர் தலைமுறை தலைநிமிரப் பாடுபட்ட பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியாருக்குப் புரட்சி வணக்கம்!**

**பல தலைமுறைகள் ஆதிக்கத்துக்குப் பணிந்தன.**

**ஒரு தலைமுறை பெரியார் நிகழ்த்திய புரட்சியைக் கண்டது.**

**பல தலைமுறைகள் அதன் மாற்றத்தைக் காண்கின்றன.**

**ஆனாலும், ஆதிக்கம் இன்னும் முற்றாக அகலவில்லை. அதனை அடையாளம் காண வேண்டியது வரும் தலைமுறைகளின் பொறுப்பும்கூட!**

**வெளிச்சமற்ற இடம் இருள்; கேள்விகளற்ற சமூகம் அதைவிடப் பேரிருள்.**

**“ஏன்? எதற்கு? எப்படி?” என்ற கேள்விகள் உயிரோடு இருக்கும் வரை, இருள் நம்மை அண்டாது.**

**பெரியார் ஏற்றிய பகுத்தறிவுச் சுடர், தலைமுறைகள் கடந்து ஒளிரட்டும்!**

**#சமூகநீதிநாள்** #SocialJusticeDay #PeriyarForever

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.

# எக்காலத்துக்கும் பொருந்தும் பெரியாரின் கொள்கைகளை அடுத்த தலைமுறை இளைஞர்களிடம் அதிகமாகக் கொண்டு சேர்ப்போம்!


## தந்தை பெரியார் பிறந்த நாளில் – உதயநிதி ஸ்டாலின் வலைதளப் பதிவு!

**சென்னை, செப். 19-**

**தந்தை பெரியார் அவர்களின் பிறந்தநாளையொட்டி சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் விடுத்த வலைதளப் பதிவொன்றில், “எக்காலத்துக்கும் பொருந்தும் பெரியாரின் கொள்கைகளை அடுத்த தலைமுறை இளைஞர்களிடம் அதிகமாகக் கொண்டு சேர்ப்போம்!” என்று கூறுரைத்துள்ளார்.**

அவர் விடுத்துள்ள வலைதளப் பதிவு வருமாறு:-

ஈராயிரம் ஆண்டு இருளுக்கு எதிராக அறிவுத் தீப்பந்தம் ஏந்திய பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியார் அவர்களின் பிறந்த நாள் இன்று!



‘மானமும் – அறிவும் மனிதர்க்கு அழகு. சுயமரியாதை வாழ்வே சுக வாழ்வு’ என்று முழங்கிய தந்தை பெரியாரின் பிறந்த நாளை, தலைவர் @mkstalin அவர்கள் தலைமையிலான கழக அரசு #சமூகநீதி நாளாக அறிவித்தது.

திராவிட இயக்கத்தின் அடித்தளமும் – அடையாளமுமாக திகழும் தந்தை பெரியாரின் பணிகளை இன்னும் வேகமாக முன்னெடுப்போம்.

எக்காலத்துக்கும் பொருந்தும் பெரியாரின் கொள்கைகளை அடுத்த தலைமுறை இளைஞர்களிடம் அதிகமாக கொண்டு சேர்ப்போம். தமிழ்நாட்டின் முற்போக்கு முகத்தை நிலைநாட்டுவோம்.

**வாழ்க பெரியார்!**

**ஓங்கட்டும் அவர் புகழ்!!**

இவ்வாறு அப்பதிவில் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

## மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுவதோடு பாதுகாப்பு குறித்து எவ்விதப் புரிதலுமின்றி

# பட்டினப்பாக்கத்தில் தலைமைச் செயலகம் அமைக்கத் திட்டமா?

## சென்னை உயர்நீதிமன்ற முன்னாள் நீதிபதி கே.சந்துரு எதிர்ப்பு!

**சென்னை, செப். 19 -**

**மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படும் என்பதால், சென்னை பட்டினப்பாக்கத்தில் புதிய தலைமைச்செயலகம் கட்டும் பணியை முதலமைச்சர் விஜய் கைவிடவேண்டும் என, உயர்நீதிமன்ற முன்னாள் நீதிபதி சந்துரு தெரிவித்துள்ளார்.**

(சென்னை உயர்நீதிமன்ற முன்னாள் நீதிபதி சந்துரு ஆங்கில நாளிதழ் ஒன்றில் எழுதியுள்ள கட்டுரையில், செயின்ட் ஜார்ஜ் கோட்டையில் உள்ள தற்போதைய தலைமைச் செயலகம் இட நெருக்கடி மற்றும் நிர்வாகச் சிக்கல்கள் நிறைந்ததாக மாறியுள்ளது என்பதை யாரும் மறுக்கவில்லை என்றாலும், கல்வி நிறுவனங்கள் மற்றும் வழிபாட்டுத் தலங்கள் நிறைந்த, குறுகிய மற்றும் நெரிசலான சாந்தோம் நெடுஞ்சாலைப் பகுதியில் புதிய தலைமைச்செயலக வளாகத்தைத் திட்டமிடுவது கடுமையான கவலைகளை எழுப்புவதாக கூறியுள்ளார்.

கடந்த 2019 ஆம் ஆண்டு பிரதமர் மோடி சீன அதிபர் ஜி ஜின்பிங்கை மகாபலிபுரத்தில் சந்திக்க விரும்பிய போது, அவர்கள் இருவரையும் கோவளம் அருகே உள்ள ஒரு நட்சத்திர விடுதியில் தங்க வைக்கத் திட்டமிடப்பட்டது. ஆனால், அந்த விடுதி கடற்கரைக்கு மிக அருகில் இருந்ததாலும், எதிரி நாட்டுப் போர்க்கப்பல்களால் எளிதில் தாக்கப்படக்கூடிய நிலையில் இருந்ததாலும், சீனப் பாதுகாப்பு நிபுணர்கள் அந்த இடத்திற்கு ஒப்புதல் அளிக்க மறுத்துவிட்டனர். எனவே, சீன அதிபர் கிண்டியில் அமைந்துள்ள ஒரு விடுதியில் தங்கி அந்தச் சந்திப்பில் பங்கேற்றார். ஒரு வெளிநாட்டுத் தலைவருக்கு இத்தகைய பாதுகாப்பு அச்சுறுத்தல் இருந்த நிலையில், பாதுகாப்பு குறித்த எந்தவிதமான புரிதலும் இன்றி, ஒட்டுமொத்த தமிழ்நாடு மாநிலத்தின் தலைமைச் செயலகத்தை கடற்கரையிலிருந்து 500 மீட்டர் தொலைவிற்குள் அமைக்கத் தற்போதைய அரசு ஏன் திட்டமிடு கிறது? என்று முன்னாள் நீதிபதி சந்துரு கேள்வி எழுப்பியுள்ளார்.



மேலும், புதிய தலைமைச்செயலகம் அமையவுள்ள பட்டினப்பாக்க வளாகத்தை அடைய மாற்றுச் சாலை இல்லாத நிலையில், அங்கு கூடுதல் போக்குவரத்துச் சுமை உருவாகும் என்றும் தலைமைச் செயலகம் மற்றும் சட்டமன்றம் இங்கு அமைக்கப்பட்டால், நிரந்தர ஊழியர்கள், துணைப் பணியாளர்கள் மற்றும் பொதுமக்கள் என நாளொன்றுக்கு ஒரு லட்சம் பேர் இங்கு வருவார்கள் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. பட்டினப்பாக்கத்துக்கு அருகிலுள்ள உள்ள மந்தைவெளி ரயில் நிலையம் ஒன்றரை கிலோ மீட்டர் தொலைவிலும், அடையாறில் அமையவுள்ள மெட்ரோ ரயில் நிலையம் 2 கிலோ மீட்டர் தொலைவிலும் உள்ளன. வடக்கையும் தெற்கையும் இணைக்கும் ஒரே சாலையான சாந்தோம் நெடுஞ்சாலையில் பேருந்து வழித்தடங்களை அதிகரிப்பதற்கான வாய்ப்பு இல்லை. எனவே, ஊழியர்களுக்கும், பொதுமக்களுக்கும் போதுமான போக்குவரத்து வசதிகளைச் செய்து தராமல், வெறும் அலுவலக வளாகத்தை மட்டும் அமைப்பது ஒரு தீர்வாகாது என்று நீதிபதி சந்துரு தெரிவித்துள்ளார்.

மேலும், சீற்றத்துடன் கூடிய கடல் நீர் நிலப்பகுதிக்குள் 2 முதல் 3 கிலோ மீட்டர் வரை ஊடுருவிய 2004 ஆம் ஆண்டு சுனாமியை யாரும் மறக்க முடியாது. அப்போது புதிய தலைமைச்செயலகம் அமையவுள்ள தற்போதைய இடம் முழுமையாகத் தனிமைப்பட்டு வெள்ளத்தில் மூழ்கியது, நீர் மட்டம் மந்தைவெளி பேருந்து நிலையம் வரை உயர்ந்ததால், அப்பகுதியை மீனவர்களின் படகுகள் மூலம் மட்டுமே அணுகக்கூடிய நிலை ஏற்பட்டது. இதேபோன்று, ஸ்ரீனிவாச புரத்தில் முழு குடியிருப்பும் அடித்துச் செல்லப்பட்டதால், அது மீண்டும் கட்டப்பட வேண்டிய சூழல் உருவானது. எனவே, கடற்கரைக்கு அருகில் மேற்கொள்ளப்படும் எந்தவொரு திட்டமிடலிலும் இயற்கையின் சீற்றத்தைக் கருத்தில் கொள்ள வேண்டும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார். எனவே, சென்னை பட்டினப்பாக்கத்தில் புதிய தலைமைச்செயலகம் கட்டும் பணியை முதலமைச்சர் விஜய் கைவிடவேண்டும் என, உயர்நீதிமன்ற முன்னாள் நீதிபதி சந்துரு தெரிவித்துள்ளார்.